ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2447/04 - 2025 ජූලි මස 28 වැනි සඳුදා - 2025.07.28

2447/04 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 28 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

தொடர்பு இல.: RAT/LAN/10/F1/12.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தில் இரத்மலானை பிரதேச செயலகப் பிரிவில் தெஹிவளை கல்கிஸ்ஸ மாநகர சபை எல்லையில் இல. 541, கல்கிஸ்ஸ கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள இல. 521004/07/09 மற்றும் 2025.03.21 ஆந் திகதியுடைய நிலப்பரப்பு வரைபடத்தின் துண்டு இல. 01 மற்றும் 02 என சுட்டிக்காட்டப்பட்டுள்ள 0.1063 ஹெக்டயார் விஸ்தீரண முடைய 02 காணித்துண்டுகளின் விபரங்கள் :

**01. துண்டு இல. 01**

காணியின் பெயர் : கல்கிஸ்ஸ வத்த, மதிப்பீட்டு வரி இல. 37/2, ஸ்ரீ தர்மபால மாவத்தை; விபரம் : வீட்டுத்தோட்டம்; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர் : சீ.டி. காசி வெட்டி, இல. 10ஏ, எலய்ட் சீ பிளேஸ், கொழும்பு 08; விஸ்தீரணம் : 0.0532 ஹெக்டயார்.

**02. துண்டு இல. 02**

காணியின் பெயர் : கல்கிஸ்ஸ வத்த, மதிப்பீட்டு வரி இல. 37/2, ஸ்ரீ தர்மபால மாவத்தை; விபரம் : வீட்டுத்தோட்டம்; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர் : சீ.டி. காசி வெட்டி, இல. 11, அபேவிக்ரம மாவத்தை, கல்கிஸ்ஸ; விஸ்தீரணம் : 0.0531 ஹெக்டயார்.

மொத்த விஸ்தீரணம் : 0.1063 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 17 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு இல. 175, காலி வீதி, இரத்மலானை



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

எனும் இடத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். உறுதிப்பத்திரம் மற்றும் ஏனைய ஆவணங்களை பரீட்சிக்குமிடத்து சமர்ப்பித்தல் வேண்டும்.

எம்.எம்.கே. தில்ருக்ஷி வல்பொல,
பிரதேச செயலாளர்,
இரத்மலானை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
175, காலி வீதி,
இரத்மலானை,
2025, யூலை 22.

EOG 07 - 0324

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி அமைச்சின் குறிப்பு இல.: 4/3/9/2011/IR/189.
பிரதேச செயலாளர் இல.: BD/PS/LND/4/1/6-II.

**மேல் ஊவா அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் 01 வது கட்ட, பசறை புஹுல்வத்த வாவி நிர்மாணிப்பதற்கான காணி எடுத்துக்கொள்ளல்**

2025.02.17 ஆந் திகதி என்னால் 2424/04 இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையின் III பகுதியில் திருத்தப்பத்திரத்தில் பிரசுரிக்கப்பட்ட 07 ஆம் பந்தியின் கீழான அறிவித்தலுக்கு அமைய 2025.03.21 ஆந் திகதி நடாத்தப்படவிருந்த உரிமை விசாரணை பரிசீலனை 2025.08.29 ஆந்திகதி மு.ப. 10.30 மணிக்கு நடைபெறும் என்பதை இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.

டபிள்யூ.டி. கங்கானி சோமவீர,
பிரதேச செயலாளர்,
பசறை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
பசறை,
2025, யூலை 22.

EOG 07 - 0325

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: MD/ED/03/ACQ/20.
காணி அமைச்சின் இல.: 4/3/4/2014/LO/431.

மொணராகலை பொலிஸ் அலுவலர் பணிமனைக்கென அரசாங்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட காணிக்குப் பதிலாக வெளியிடப்பட்ட 2019.09.24 மற்றும் 2142/13 இலக்க 7 ஆம் பிரிவின் கீழான வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள, மொணராகலை நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப் பட்டுள்ள இ.கி.வ. இல. 172, மேலதிக இல. 405, பத்திர இல. 450 இல் காட்டப்பட்டுள்ள காணி எனப்படும் வாசகமானது மேலதிக இல. 409 என திருத்தம் செய்யப்பட வேண்டும் என்பதனை இத்தால் அறியத்தருகிறேன்.

டபிள்யூ.டி.பி.சி. சமரசேகர,
பிரதேச செயலாளர்,
மொணராகலை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
மொணராகலை,
2025, யூலை 22.

EOG 07 - 0326